## பாடம் 10: ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்டது (ஆதி 22)

ஒவ்வொருவரும் ஒரு பிறந்த குழந்தையை பார்க்கும் போது மட்டற்ற மகிழ்ச்சி அடைவர். ஒவ்வொரு குழந்தையும் முக்கியமானது. அப்படியெனில் இந்த குழந்தை உண்மையிலேயே மிகவும் விஷேசமானது. ஆபிரகாம் நூறு வயதாய் இருந்த போது 90 வயதுள்ள அவன் மனைவி சாராள் ஒரு குமாரனை பெற்றாள். அவனுக்கு நகைப்பு என்னும் பொருள் கொண்ட 'ஈசாக்கு' என்ற பேரிட்டார்கள். ஏனெனில் சாராள், 'தேவன் என்னை நகைக்கப்பண்ணினார். எனக்கு குமாரன் பிறந்திருப்பதை கேட்கிற யாவரும் என்னோடே கூட நகைப்பார்கள். எனக்கு இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என யார் நினைத்திருப்பார்கள்?' என்றாள்.

ஈசாக்கு சிறுவனாய் இருக்கும் போது தேவன் சொப்பனத்திலே ஆபிரகாமை நோக்கி, 'ஆபிரகாமே' என்று கூப்பிட்டார். அவன், 'இதோ அடியேன்' என்று பதிலளித்தான். அப்பொழுது அவர், "உன் புத்திரனும், உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்து கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய்,அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலை ஒன்றின் மேல் அவனை தகனபலியிடு'' என்றார். இந்த இடம் இன்று எருசலேமினில் உள்ள ஆலய மலையின் ஒரு பகுதியாக உள்ளது. (II நாளாகமம் 3:1) அங்கே இஸ்லாமியரின் ஒரு மசூதியின் கூரை உள்ளது. இத்தகைய தகனபலிகள் வேதாகமத்தில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது. அது ஆட்டுக்குட்டியை பலியிட்டு பின் இறந்த விலங்கின் உடலை எரிப்பதை உள்ளடக்கியது. தகனபலியிடுவது என்பது அதை செய்பவர் தன்னை முழுமையாக தேவனுக்கு ஒப்புவிப்பதன் அடையாளமாக இருந்தது.

எனவே ஆபிரகாம் எந்த கேள்வியும் கேட்காமல் உடனடியாக கீழ்ப்படிந்தான். மறுநாள் அவன் அதிகாலையிலே எழுந்து, தகனபலிக்கு வேண்டிய கட்டைகளைப் பிளந்தான். தன் கழுதையின் மேல் சேனங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும், தன் குமாரனாகிய ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, பெயர்செபாவிலிருந்து மோரியா தேசத்திற்கு பயணப்பட்டான். அந்த குறிப்பிட்ட மலையை சென்றடைவதற்கு மூன்று நாட்கள் ஆனது. அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி, "நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கேயே காத்திருங்கள். நானும் பிள்ளையான்டானும் அவ்விடம் மட்டும் போய் தொழுது கொள்வோம். தகனபலி செலுத்திய பிறகு நாங்கள் திரும்பி வருவோம்'' என்றான். தகனபலியிடுவதற்கு ஈசாக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் இது ஆபிரகாமின் உண்மையான விசுவாச அறிக்கையாய் இருக்கிறது. தகனபலிக்குரிய கட்டைகளை எடுத்து தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

மலையின் உச்சிக்கு அவர்கள் சென்று கொண்டிருக்கும் போது, ஈசாக்கு சுற்றிப் பார்த்து "என் தகப்பனே, இதோ நெருப்பும், கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?'' என்று கேட்டான்.

ஆபிரகாம் தன் மகனை பார்த்து, "என் மகனே தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியை பார்த்துக் கொள்வார்" என்றான். கடைசியாக தேவன் தமக்கு தகனபலி செலுத்த கட்டளையிட்ட இடத்தை வந்தடைந்தார்கள். ஆபிரகாமும், ஈசாக்கும் அங்கே பலிபீடத்தின் அடித்தளத்திற்கான பெரிய கற்களை கண்டார்கள். பிறகு ஆபிரகாம் நிலக்கரி எளிதாக தீப்பற்றி நெருப்பு விரைவாக முழுவதையும் எரித்து விடும்படியாக கட்டைகளை ஜாக்கிரதையாக அடுக்கினான். பின்னர் ஆபிரகாம் தன் சிறிய குமாரனை கையில் எடுத்து, அவனை கவனமாக கட்டினான். அவன் தன் மகனை பலிபீடத்தில் தாழ்வாக வைத்தபோது அந்த சிறுவன் மனதில் என்ன நினைத்திருப்பான்? எப்படி பயந்திருப்பான்? என்பதை நம்மால் கற்பனை மட்டும் தான் செய்ய முடியும். தகனபலிகள் உயிருடன் எரிக்கப்படுவது இல்லை. ஆனால் மிருகங்களின் கழுத்தை துண்டித்து எரிக்கப்படுவதற்கு முன்பாக அதன் இரத்தம் ஊற்றப்பட வேண்டும். தன் குமாரனை வெட்டும்படிக்கு ஆபிரகாம் தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். அதே நேரம் ஈசாக்கின் மூலம் தன் சந்ததி பெருகும் என்ற தேவனின் வாக்குதத்தத்தையும் அவன் அறிந்திருந்தான்.

ஒரு அப்பட்டமான உண்மை என்னவென்றால் ஆபிரகாமின் 100 வது வயதில் 90 வயதான அவன் மனைவி சாராள் பெற்றெடுத்த அதிசயமான குழந்தை ஈசாக்கு. அவன் கொல்லப்பட்டு பலிபீடத்தில் தகனபலியிட்ட பின்பு தேவன் எப்படி தன் வாக்குதத்தத்தை நிறைவேற்றுவார் என்பது ஆபிரகாமின்

பிரச்சினையே அல்ல. ஆனால் தேவனுக்கு கீழப்படிவது அவனுடைய கடமை. அவன் தன் குமாரனை வெட்டும்படிக்கு கத்தியுடன் கையை நீட்டியபோது திடீரென கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, “ஆபிரகாமே,ஆபிரகாமே” என்று கூப்பிட்டார். “இதோ அடியேன்” என ஆபிரகாம் மிகுந்த நம்பிக்கையோடு பதிலளித்தான்.

அப்பொழுது அவர் “பிள்ளையான்டான் மேல் உன் கையை போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்” என்றார்.

ஆபிரகாம் விலையேறப் பெற்ற தன் மகனைப் பார்த்து பெருமூச்சு விட்டான். பின்னர் ஆபிரகாம் பார்த்த போது புதரில் ஏதோ அசைகின்ற சத்தத்தை கேட்டான். அவன் அந்த புதரை நோக்கி நடந்து அதில் தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஆட்டுக்கடாவை கண்டுபிடித்தான். அவன் விரைவாக தன் மகனின் கட்டுகளை அறுத்தான். பின் இருவரும் சேர்த்து தாங்கள் கட்டிய பலிபீடத்தில் அந்த ஆட்டுக்கடாவை தகன பலியிட்டார்கள். ஆபிரகாம் தன் மகனிடம் “என் குமாரனாகிய ஈசாக்கே இந்த இடத்தை நினைவில் வைத்துக் கொள். நாம் இதற்கு ‘கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும்’ என்ற அர்த்தம் கொள்ளும்படியாய் ‘யேகோவாயீரே’ என்று பேரிடுவோம்’’ என்றான். அவர்கள் தேவனை தொழுதுகொண்ட பின் வீட்டிற்கு செல்ல ஆயத்தமானார்கள்.

கர்த்தருடைய தூதனானவர் இரண்டாம் முறை ஆபிரகாமை கூப்பிட்டு “நீ எனக்கு கீழ்படிந்தபடியால் நான் உன்னையும் உன் சந்ததியையும் ஆசீர்வதிப்பேன். உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகப்பண்ணுவேன். உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களை சுதந்தரித்து கொள்ளுவார்கள், மற்றும் நீ எனக்கு கீழ்படிந்தபடியால் உன் சந்ததிக்குள் பூமியின் சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ என்றார் (ஆதி 22:18) பின்பு ஆபிரகாம் தன் மகன் மற்றும் வேலைக்காரருடன் வீடு திரும்பினான்.

இந்த மலை தேவனுடைய மலை என்று அழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் எபிரெயர் புத்தகத்தின் ஆசிரியர் இந்த சம்பவத்தை குறித்து கூடுதல் தகவல்களை நாம் புரிந்து கொள்ள தருகிறார். தேவன் ஆபிரகாமை சோதித்தார். அந்த சோதனையில் இருந்து அவனை தேவன் தப்புவிக்கவும் செய்தார். ஏனெனில், ஈசாக்கு வாக்குதத்தத்தின் மகன் என ஆபிரகாம் நம்பினான். ஈசாக்கை மரணத்திலிருந்து விடுவித்து தன் வாக்குதத்தத்தை நிறைவேற்ற தேவனால் முடியும் என முழுமையாக விசுவாசித்தான். எனவேதான் ஆபிரகாம், ஈசாக்கை திரும்பவும் பெற்றுக் கொண்டு அதற்கு பதில் ஆட்டுக்கடாவை பலியிட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது (எபி 11-17)

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபும், விசுவாசத்தையும் கிரியையும் பற்றி கற்றுக் கொடுக்க ஆபிரகாமை பற்றி கூறினார். அவர் ஆபிரகாமின் விசுவாசமும் அவனுடைய கிரியைகளும் ஒன்றினைந்திருந்ததால் அவனுடைய செய்கையில் அவனது விசுவாசம் முழுமையடைந்தது என்று பின்வரும் வசனங்களில் விளக்கியுள்ளார். “அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று. அவன் தேவனுடய சிநேகிதன் எனப்பட்டான். ஆதலால் மனுஷன் விசுவாசத்தினால் மாத்திரமல்ல கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே” என்கிறார் (யாக் 2:21-24)

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் ஆபிரகாம் எவ்வளவு விசுவாசத்தில் வளர்ந்திருந்தான் என்பதை விளக்குகிறது. தேவன் ஆபிரகாமிடம் நீ உன் தேசத்தை விட்டு செல், சாராளின் மூலம் ஒரு மகன் பிறப்பான் என்பதை நம்பு என்று பல காரியங்களை கேட்டிருந்தாலும்,தன் மகனை தகனபலியிட வேண்டும் என்பதே எல்லாவற்றிலும் மிகப்பெரிய சோதனையாக இருந்தது. ஈசாக்கை பலியிட சொல்கின்ற இந்த சோதனையின் மூலம் ஆபிரகாம் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விட தேவன் மீது தான் கொண்ட அன்பும் நம்பிக்கையும் முக்கியமானது என்பதை விளங்கச் செய்கிறார். தேவன் ஈசாக்கின் மரணத்தை விரும்பவில்லை. ஆனால் ஆபிரகாமின்

முழுமையான அர்ப்பணிப்பையே எதிர்பார்க்கிறார். தேவன் ஈசாக்கிற்கு பதிலாக ஒரு ஆட்டுக்கடாவை பலியிட அளித்தது போலவே ஆட்டிக்குட்டியான இயேசுவை நமக்கு பலியாக ஒப்புக்கொடுத்தார்.

இந்த பாடம் நமக்கு தெரிவிக்கின்ற முக்கியமான சத்தியம் என்னவென்றால் ஆபிரகாமினால் தேவனுடைய திட்டத்தை புரிந்து கொள்ள முடியாமல் போனாலும், அவருடைய வார்த்தையை முழுமையாக விசுவாசித்தான். ஆபிரகாம் தன் செயலினால் விசுவாசத்தை வெளிப்படுத்திய போது தேவன் அவனுக்கான ஆசிர்வாதத்தை குறித்த உடன்படிக்கையை புதுப்பித்தார். ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான சம்பவங்களில் இதுவும் ஒன்று ஏனெனில் கீழ்ப்படிதலோடு விசுவாசத்தை வெளிக்காட்டுகிறது மற்றும் தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரனை மக்களுடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுப்பார் என்பதையும் முன்னறிவிக்கிறது. "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புக் கூர்ந்தார்" (யோவான் 3:16)

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்

1) ஈசாக்கை குறித்து தேவன் ஆபிரகாமிடம் விடுத்த கட்டளை என்ன? (6 நொடிகள் நிற்கவும்)

   "அவனைத் தகனபலியிடு" என்று கட்டளையிட்டார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2) ஈசாக்கு பலி செலுத்துவதற்கான ஆட்டுக்கடாவைக் குறித்து கேட்ட போது ஆபிரகாமின் பதில் எவ்வாறு தேவன் மேல் அவனுக்கு இருந்த விசுவாசத்தை விளக்குகிறது? (6 நொடிகள் நிற்கவும்)

   ஆபிரகாம் 'தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்' என கூறினார். என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3) ஈசாக்கிற்கு பதிலாக தேவனால் ஆட்டுக்கடா கொடுக்கப்பட்டதின் முக்கியத்துவம் என்ன? (6 நொடிகள் தாமத்தின் பிறகு)

   'ஒரே பேறான குமாரனை நமக்கு பதிலாக மரிப்பதற்கு ஒப்புக் கொடுத்தார்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

ஆபிரகாமை பற்றிய இந்த பாடத்தை உங்கள் நண்பரிடம் சொல்லுங்கள். இந்த சம்பவத்திலிருந்து இன்றைய மக்கள் கற்றுக் கொள்ளக்கூடியது என்ன?

(பதில்) தேவன் தனக்கு கீழ்ப்படிகிறவரின் வாழ்க்கையையும் அவர்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையையும் ஆசீர்வதிக்க தனக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிகின்ற மக்களையே எதிர்பார்க்கிறார்.

பாடம் முடிந்தது